**11.01.2024 ஆம் தேதி வியாழக் கிழமை காலை 11.00 மணியளவில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

## முன்னிலை. திரு.சே.முத்துத்துரை.பி.காம்.அவர்கள்

## பொருட்கள்

| | | |
|---|---|---|
| 1 | காரைக்குடி நகராட்சியில் தூய்மை இந்தியா இயக்கம் 2.0 திட்டத்தின் கீழ் நகரை அழகுப்படுத்துதல் தலைப்பின் போட்டியில் கலந்து கொள்ளுவதற்காக இந்நகரின் அனைத்து 36 வார்டுகளில் உள்ள முக்கிய இடங்களை வர்ணம் தீட்டி அழகுப்படுத்துவதற்கு அதற்கு ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.3.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**(ந.க.எண். /2023/எச்1)** | **தீர்மான எண். 399**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 2 | காரைக்குடி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் 36 வார்டு பகுதிகளை சுத்தம் செய்து நோய் வராமல் தடுக்கவும் பேருந்து நிலையம் மற்றும் அதிக பொது மக்கள் கூடும் இடங்களில் தொற்று நீக்கம் செய்ய மற்றும் எதிர்வரும் காலம் மழை காலம் என்பதாலும், பிளீச்சிங் பவுடர் சேர்ந்து நீர்த்த சுண்ணாம்பு கலந்து தெளிக்க வேண்டியுள்ளது. தற்பொழுது பிளீச்சிங் பவுடர் அளவு குறைவாக உள்ளது. பிளீச்சிங் பவுடர் தூள் 10,000 கிலோ மற்றும் நீர்த்த சுண்ணாம்பு தூள் 20,000 கிலோ தேவைப்படுகிறது. எனவே, பொருளினை வாங்குவதற்கும் உத்தேச செலவினம் ரூ.7.00 இலட்சம் ஆகும். மேற்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதன் விபரம் பின்வருமாறு. | **தீர்மான எண். 400**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| S.No | Address | நீர்த்த சுண்ணாம்பு | ப்ளீசிங் பவுடர் |
|---|---|---|---|
| 1 | Eswari Enterprisies<br>எண்.3,நித்தியகல்யாணபுரம்,<br>தேவகோட்டை. | Rs.9.45/ per Kg | Rs.47.20/ per Kg |
| 2 | அருண்ஜனை ஏஜென்சீஸ்,<br>எண்.11, வெண்கல கடை<br>2வது தெரு, மதுரை. | Rs.10.25/ per Kg | Rs.49.00/ per Kg |

| | | |
|---|---|---|
| | மேற்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த Eswari Enterprisies விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**(ந.க.எண். 3562/2023/எச்1)** | |
| 3 | காரைக்குடி நகராட்சியில் பொதுசுகாதாரப்பிரிவில் 36 வார்டு பகுதிகளை சுத்தம் செய்து நோய் வராமல் தடுக்கவும் பேருந்து நிலையம் மற்றும் அதிக பொது மக்கள் கூடும் இடங்களில் தொற்று நீக்கம் செய்ய மற்றும் எதிர்வரும் காலம் மழை காலம் என்பதாலும், லெமன் கிராஸ் ஆயில், கருப்பு பினாயில் மற்றும் வெள்ளை பினாயில் உபயோகம் செய்து தேவைப்படுகிறது. தற்பொழுது லெமன் கிராஸ் ஆயில் அளவு குறைவாக உள்ளது. லெமன் கிராஸ் ஆயில் 200 லிட்டர் கருப்பு பினாயில் 100 லிட்டர் மற்றும் வெள்ளை பினாயில் 100 லிட்டர் தேவைப்படுகிறது. எனவே, பொருளினை வாங்குவதற்கும் உத்தேச செலவினம் ரூ.6.00 இலட்சம் ஆகும். மேற்படி விலைப்புள்ளிகள் பெறப்பட்டதன் விபரம் பின்வருமாறு. | **தீர்மான எண். 401**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| S.No | Address | லெமன் கிராஸ் ஆயில் | கருப்பு பினாயில் | வெள்ளை பினாயில் |
|---|---|---|---|---|
| 1 | Eswari Enterprisies<br>எண்.3,நித்தியகல்யாணபுரம்,<br>தேவகோட்டை. | Rs.2224.30/Litre | Rs.76.70/Litre | Rs.70.80/Litre |
| 2 | அருண்ஜனை ஏஜென்சீஸ்,<br>எண்.11, வெண்கல கடை<br>2வது தெரு, மதுரை. | Rs.2350/Litre | Rs80.00/Litre | Rs.75.00/Litre |

மேற்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த Eswari Enterprisies விலைப்புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>**(ந.க.எண். 3562/2023/எச்1)** | |
| 4 | காரைக்குடி நகராட்சியில் 36 வார்டுகளிலும் குடியிருப்புகள், வணிக நிறுவனங்கள், கல்வி நிறுவனங்கள் தினசரி சந்தை, வாரச்சந்தை மற்றும் இதர பகுதிகளில் தினசரி சேகரமாகும் சுமார் 48 மெடன் குப்பைகளில் தூய்மைப் பணியாளாகளால் பிரித்து வாங்கப்படும் மக்கும் குப்பைகளில் நகராட்சிக்கு சொந்தமான 4 நுண் உரக்கிடங்குகள், வாரச்சந்தையில் இயங்கி வரும் உயிர் மீத்தேன் கூடம் செயல்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டு மீதமுள்ள மக்காத குப்பைகள் மற்றும் பிரித்து வாங்க முடியாத பகுதிகளில் சேகரமாகும் மொத்த குப்பைகள் (Mixed waste) ரஸ்தா உரக்கிடங்கிற்கு எடுத்துச்செய்யப்பட்டுகிறன.<br>மேற்கண்டவாறு எடுத்துச்செல்லப்படும் குப்பைகள் கடந்த 20 மாதங்களாக R.M.Solution நிறுவனம் மூலம் நகராட்சிக்கு சொந்தமான MRF சென்டர் மூலம் செயலாக்கம் மேற்கொள்ளப்பட்டு மக்கும் குப்பைகள் வின்ட்ரோ கம்போஸ்ட் மூலம் உரமாக்கப்பட்டு உரம் விவசாயிகளுக்கு இலவசமாகவும் ரஸ்தா உரக்கிடங்கு தோட்ட பயன்பாட்டிற்கும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.<br>மக்காத குப்பைகள் RDF மற்றும் மக்காத குப்பைகளில் உள்ள துணிகள், ரப்பர் போன்ற பொருட்கள் Shredding Machine மூலம் துகள்களாக மாற்றப்பட்டும் சிமெண்ட் ஆலைக்கு எரிபொருள் பயன்பாட்டிற்கு அனுப்பப்பட்டு வருகிறது. இவ்வாறான செயல்பாட்டினால் ரஸ்தா உரக்கிடங்கில் சேகரமாகும் குப்பைகளின் அளவு கணிசமான அளவு குறைகிறது. மேலும், குப்பைகள் கொட்டப்பட்டு தேக்கமடையும் அளவு குறைவதால் நிலத்தடி நீர், நிலம் மாசடைவதும் குறைகிறது.<br>எனவே மேற்கண்ட R.M.Solution நிறுவன பணியின் காலம் 30.11.2023ல் முடிவடைவதால், மேற்கண்ட பணியினை மேலும் 6 மாதக்காலத்திற்கு தொடர அனுமதியும் (1.12.2023 முதல் 31.05.2024 வரை) ஆகும் உத்தேச செலவினத்தொகை ரூ.44.62 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண். 402**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| 5 | நகராட்சி நிர்வாக இயக்குனர் அவர்களின் சுற்றறிக்கை நாள்: 19.10.2023 மற்றும் ந.க.எண்: 16387/M2/2023–ன்படி, முன்னாள் முதலமைச்சர், டாக்டர்.கலைஞர் திரு.மு.கருணாநிதி அவர்களின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் 2023 ஜூன் திங்கள் முதல் 2024 ஜூன் திங்கள் வரை நடைபெறுவதை முன்னிட்டு நகர்புற உள்ளாட்சி அமைப்புகளான நகராட்சி பகுதிகளில் 28.10.2023, 04.11.2023, 18.11.2023 மற்றும் 25.11.2023 ஆகிய தேதிகளில் ஏதேனும் ஓர் தேதியில் ஒரு மருத்துவ முகாம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் மற்றும் பொது சுகாராத் துறையின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடத்த உரிய அறிக்கையினை புகைப்படம் மற்றும் மென்பொருள் வடிவத்திலும் நகராட்சி நிர்வாக இயக்குனர் அலுவலகத்திற்கும் அனுப்பி வைக்க அறிவுறுத்தியுள்ளனர். எனவே இந்நகராட்சியில் 25.11.2023 அன்று SMS பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் மருத்துவ முகாம் நடத்திட முகாமிற்கு தேவையான இருக்கைகள், டேபிள் சேர்கள், தரை விரிப்புகள், மருத்துவ முகாம் அறிவிப்பதற்கு உண்டான விளம்பர பலகைகள், முகாம் துவங்கி வைப்பதற்கு உண்டான குத்துவிளக்கு மற்றம் மைக்செட்டுகள் அமைத்து மருத்துவமுகாம் சிறப்பாக நடத்திட ஆகும் உத்தேச செலவினம் ரூ.1,00,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண். 403**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 6 | இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் இயங்கும் வாகன எண்: TN63CY1770 mini bobcart ன் பேட்டரியின் தன்மை வாகனத்தை இயக்க ஏதுவற்ற சூழ்நிலையில் உள்ளது. எனவே வாகனத்தை இயக்க பயன்பாட்டிற்கு கொண்டு வர வாகனத்திற்கு புதிய பேட்டரி வாங்கிட ஆகும் உத்தேச செலவினம் ரூ.12000/– த்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண். 404**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 7 | காரைக்குடி நகராட்சி பொதுசுகாதார பிரிவில் டெங்கு தடுப்பு தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதன்படி வீடு வீடாக சென்று பொது மக்களுக்கு டெங்கு மற்றம் ஏடீஸ் வகை கொசு பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தவும் வீடுகள் மற்றும் சுற்றுப்புறங்களில் கொசுப்புழு | **தீர்மான எண். 405**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

உற்பத்தி இடங்களை அழித்து டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ள 50 வீடுகளுக்கு 1 DBC பணியாளர்கள் (Domestic Breading Cheaker) வீதம் 35,382 வீடுகளுக்கு 110 DBC பணியாளர்கள் வரை நியமிக்க வேண்டும்.

தற்சமயம் 88 DBC பணியாளர்கள் வரை நியமித்து பணியாற்றி வருகின்றனர். கோடை காலம் முடிவடைந்த நிலைவில் பருவ மழைக்காலம் வரவிருப்பதால் ஏடீஸ் கொசு உற்பத்தி அடர்த்தி (Density) கூடுதல் ஆகக்கூடிய சூழல் ஏற்படுவதாலும் வருங்காலங்களில் டெங்கு காய்ச்சல் அதிகளவு பரவக்கூடிய சூழல் ஏற்படும். மேற்படி DBC பணியாளர்கள் நியமிக்க அக்டோபர் 2023 முதல் டிசம்பர் 2023 வரை மட்டுமே மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேற்படி DBC பணியாளர்களை வெளிகொணர்வு மூலம் திரு.டி.செந்தில்குமார் ஒப்பந்தகாரர் வழங்கி வருகிறார்.

நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அலுவலக சுற்றறிக்கை ந.க.எண்21787/2021/EA2 நாள்.02.10.2021–ன் படி தற்போது இப்பணிக்கு புதிய மதிப்பீடுகள் தயார் செய்து புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு நடவடிக்கையில் உள்ளது. புதிய ஒப்பந்தகாரர் உத்தரவு வழங்குவதற்கு சிறிய காலம் ஏற்படும் என்பதால் அதுவரை டெங்கு தடுப்பு நடவடிக்கைகளுக்கு பாதிப்பு ஏற்படாத வண்ணம் பணிகள் மேற்கொள்ள வேண்டும்.

எனவே புதிய ஒப்பந்த வேலை உத்தரவு வழங்கும் வரையில் மேலும் ஜனவரி 2024 முதல் மார்ச் 2024 வரையுள்ள காலத்திற்கு இப்பணியினை மேற்கொண்ட ஒப்பந்தகாரர் மூலம் மேற்கொள்ளவும் மாவட்ட ஆட்சியர் அலுவலக பழைய ஊதியப்பட்டியல் படி தினசரி ஊதியம் ரூ.270 வீதம் x 110 பணியாளர்களுக்கு x 26 நாள்கள் (மாதம் 1க்கு ஞாயிறு தவிர) x 3 மாதங்களுக்கு ரூ.23,16,600/– ஆகும். மேற்படி 110 DBC பணியாளர்கள் வரை பணியில் ஈடுபடுத்தவும் அதற்கான 3 மாதங்களுக்கான உத்தேச செலவு ரூ.23,16,600/–க்கும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1. அனுமதிக்கலாம்
2. பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் முன் அனுமதி பெற்று தொடர் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

**(ந.க.எண்.3325/2017/H1)**

<table>
<tr>
<td>8</td>
<td>இந்நகராட்சிக்குட்பட்ட சூடாமணிபுரம் மனைப்பிரிவு பகுதியில் உள்ள OSR திறந்த வெளிப்பகுதியில் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள ஆக்கிரமிப்பு கட்டிடங்களை அளவீடு செய்து ஆக்கிரமிப்புகளை அகற்றும் நடவடிக்கை மேற்கொள்ள சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை வழக்கு எண்.WP(MD) No.10034 of 2009, நாள்.30.10.2023 தீர்ப்பில் உத்தரவிடப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் அளவீடு செய்யும் பணி மற்றும் அகற்றும் பணிகள் தொடர்பாக ஆவணங்கள் தயார் செய்து வரைபடங்கள், புகைப்படங்கள், ஆக்கிரமிப்புதாரர்கள் விபரங்கள் (5செட் புக் லெட்)பட்டியல் தயார் செய்வதற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.2,00,000/- (இரண்டு இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.4444/2023/எப்1</td>
<td>தீர்மான எண். 406<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>9</td>
<td>இந்நகராட்சியில் நடைபெற்ற பல்வேறு திட்டப்பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்த KFW தொகையை திரும்ப வழங்க கோரப்பட்டது அதன் விபரம் கீழ்கண்டவாறு
<table>
<tr><th>வ. எண்</th><th>பணி விபரம்</th><th>வைப்புத்தொகை பதிவேடு விபரம்</th><th>தொகை ரூ.</th></tr>
<tr><td>1</td><td>KFW 2018-2019 திட்டத்தின் கீழ் பாப்பா ஊரணி மேம்பாட்டு பணி ந.க.எண்.2776/2023/இ1</td><td>A/C - 3401001<br>WSC - 2018 -19<br>ப.எண்.12</td><td>ரூ.54,000/-</td></tr>
<tr><td>2</td><td>KFW 2018-2019 திட்டத்தின் கீழ் பாப்பா ஊரணி மேம்பாட்டு பணி ந.க.எண்.2776/2023/இ1</td><td>A/C - 3401001<br>WSC - 2018 -19<br>ப.எண்.12</td><td>ரூ.54,000/-</td></tr>
<tr><td colspan="3">மொத்தம்</td><td>ரூ.1,08,000/-</td></tr>
</table>
மேற்கண்ட விபரப்படி, குடிநீர் நிதி வைப்புத்தொகை பதிவேட்டில் உள்ள தொகை ரூ.1,08,000/- திரு. சுந்தரபாண்டியன் என்ற பெயரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.<br>எனவே, பதிவு செய்யப்பட்டுள்ள காலங்கடந்த வைப்புத் தொகை ரூ.1,08,000/- ஐ திரு.சுந்தரபாண்டியன் என்பவருக்கு திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2776/2023/இ1)</td>
<td>தீர்மான எண். 407<br>அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr>
<td>10</td>
<td>காரைக்குடி நகராட்சிக்கு சொந்தமான கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களும் உரிமையாணைகளும் 01.04.2024 முதல் அல்லது குத்தகை இனங்கள் ஒப்படைக்கும் நாள் முதல் மூன்றாண்டுகளுக்கு அனுபவிக்கும் உரிமம் கீழ்க்கண்ட விவரப்படி பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர வேண்டியுள்ளது. எனவே கீழ்க்கண்ட இனங்களுக்கு அதனெதிரில் குறிப்பிட்டுள்ள கலம் எண்.5ல் கண்ட கால அளவிற்கு அனுபவித்துக் கொள்ளும் உரிமத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும், ஏல அறிக்கை நிபந்தனைகளை மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்யவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.<br><br><u>2024–2027ஆம் ஆண்டுக்கான ஏல அட்டவணை</u><br><br>
<table>
<tr><th>வ. எண்</th><th>ஏலக் குத்தகை விபரம்</th><th>தொடக்க ஏல பொறுப்புத் தொகை ரூ.</th><th>கூடுதல் வைப்புத் தொகை ரூ.</th><th>உரிமை ஆணை காலம்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>3</td><td>4</td><td>5</td></tr>
<tr><td>1</td><td>பேரறிஞர் அண்ணா தினசரி நாளங்காடி கடைகளில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை</td><td>4,00,000</td><td>4,00,000</td><td>01.04.2024 முதல் 31.03.2027 வரை</td></tr>
<tr><td>2</td><td>இந்நகராட்சி கழனிவாசல் சாலையில் அமைந்துள்ள ஆடு அடிக்கும் தொட்டியில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை</td><td>2,00,000</td><td>2,00,000</td><td>01.04.2024 முதல் 31.03.2027 வரை</td></tr>
</table>
</td>
<td>தீர்மான எண். 408<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | இராஜாஜி பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள இருசக்கர வாகனம் காப்பகத்தில் தினசரி கட்டணம் வசூல் செய்யும் உரிமை | 2,00,000 | 2,00,000 | 01.04.2024 முதல் 31.03.2027 வரை |
| 4 | நகராட்சி எல்லைக்குள் சாலை ஓரங்களில் தற்காலிகமாக தினசரி சாமான்களை பரப்பி வைத்து பொது மக்களுக்கோ அல்லது காவல் துறையினருக்கோ இடைஞ்சல் இல்லாது ஒழுங்குபடுத்தி விற்பவர்களிடமிருந்து 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 270வது பிரிவின் கீழ் தினசரிக் கட்டணம் வசூல் செய்யும் உரிமை மற்றும் பேருந்து நிலையத்தில் பாசி பவளம் விற்பவர்களிடம் கட்டணம் வசூலிக்கும் உரிமை. | 10,00,000 | 10,00,000 | 01.04.2024 முதல் 31.03.2027 வரை |

**அலுவலகக்குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி ஏல அறிவிப்பினை தினசரி நாளிதழில் வெளியிடவும் மற்றும் மாவட்ட அரசிதழில் வெளியிடவும், மேலும் இதர செலவினத்திற்கும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.4492/2023/அ1)

| | | |
|---|---|---|
| 11 | தலைமை தேர்தல் அலுவலர் மற்றும் அரசு தலைமை செயலர் சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்3500/2023–17 மற்றும் 36 நாள்10.08.2023 & 18.10.2023–ல் தெரிவித்துள்ளதின்படி காரைக்குடி நகராட்சி பகுதியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்கமுறை திருத்தம் – 2024 சிறப்பு முகாம் 04.11.2023, 05.11.2023 மற்றும் 25.11.2023, 26.11.2023 ஆகிய நாட்களில் காரைக்குடி நகராட்சி 36 வார்டுகளிலும் உள்ள பொது மக்கள் புதிய வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப் படிவம் – 6, இறப்பு மற்றும் வெளியூர் மாற்றம் ஆகியவற்றிற்கு படிவம் – 7, திருத்தம் மற்றும் இடமாற்றம் செய்திட படிவம் – 8 ஆகியவற்றை மேற்காணும் தேதிகளில் பொது மக்களிடம் பெற்று அதனை விரைவாக தட்டச்சு செய்திடவும் புகைப்படங்களை பதிவேற்றம் செய்திடவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.10,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக் குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண் 127/2020/சி6 | **தீர்மான எண். 409**<br>அனுமதிக்கப்பட்டது |
| 12 | இந்நகராட்சி குடிநீர் நிதி 2023–24ன் கீழ் ரூ.10.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் உள்ள அனைத்து ஆழ்குழாய் கிணறுகளுக்கும் திரவ குளோரினேஷன் (Sodium Hypo ஜுன் 2023 முதல் நவம்பர் 2023 வரை ) சப்ளை செய்தல் பணிக்கு நகர்மன்ற தீர்மான எண்.114, நாள்.18.05.2023–ல் அனுமதி அளித்ததின் பேரில் 05.07.2023– அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டது. இதில் கீழ்க்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளியின் ஒப்புநோக்கு பட்டியல் பின்வருமாறு.<br><br>**வ. எண்** / **ஒப்பந்ததாரர் பெயர்** / **ஒப்பந்த சதவீதம்**<br>1 / M/S Sri Raja Ganapathy Engineering Works, Avadi, Chennai. / மதிப்பீட்டை விட (–) 0.29% குறைவு<br>2 / M/S Sri Sabari Engineering Works Chennai / மதிப்பீட்டை விட (+) 3.45% அதிகம்<br><br>மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் M/S Sri Raja Ganapathy Engineering Works, Avadi, Chennai அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டைவிட (–) 0.29% குறைவாக உள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண். 410**<br>அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | **அலுவலகக்குறிப்பு :-**<br>அ) அனுமதிக்கலாம்.<br>ஆ) குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம். (ந.க.எண்.153/2019/இ1) | |
| 13 | இந்நகராட்சிக்குட்பட்ட சூடாமணிபுரம் பகுதிகளில் பொதுப்பயன்பாட்டு இடங்களில் ஆக்கிரமிப்புகளை அளவீடு செய்து அகற்றி அப்புறப்படுத்த சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது SP.Application (MD) No:332 of 2023 மற்றும் contp (MD) No.421 and 932 of 2013 சம்மந்தமாக நகராட்சி சார்பில் ஆஜராகி கூடுதல் கால அவகாசம் பெற்றுத்தந்த சென்னை உயர்நீதி மன்றத்தின் அரசு கூடுதல் தலைமை வழக்கறிஞர் திரு.R.பாஸ்கரன் அவர்களுக்கு வழக்கு கட்டணம் ரூ.50,000/- (ஐம்பதாயிரம் மட்டும்) வழங்க கோரி பட்டியல் வரப்பெற்றுள்ளது. அதன்படி உரிய தொகையை நேரில் வழங்கிய வகையில் திரு.ம.தங்கராஜ், நகரமைப்பு ஆய்வர் (பொறுப்பு) அவர்களுக்கு மேற்படி தொகையை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு-**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தவைலர் அவர்களின் முன் அனுமதி பெற்று வழக்கறிஞர் கட்டணம் வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.<br>ந.க.எண்.4444/2023/எப்1 | **தீர்மான எண். 411**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 14 | காரைக்குடி நகராட்சியில் "சம்பையூற்று" கரையில் அமைக்கப்பட்டுள்ள 13 ஆழ்குழாய் கிணறுகள் மற்றும் நகரில் ஆங்காங்கே அமைக்கப்பட்டுள்ள 24 ஆழ்குழாய் கிணறுகளின் நீர் ஆதாரத்தைக் கொண்டு நகரில் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இதன்மூலம் நாள் ஒன்றுக்கு 12.03 MLD குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. அதன்படி நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 112 LPCD வீதம் குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது. இவ்வாறு விநியோகம் செய்யப்படும் குடிநீரில் திரவ குளோரின் (Sodium Hypo Chloride) மூலம் குளோரினேசன் செய்யப்படுகிறது. ஒரு இலட்சம் லிட்டருக்கு 2 ½ லிட்டர் வீதம் திரவ குளோரின் சேர்த்து வழங்கும் பட்சத்தில், குடிநீர் விநியோகத்தின் கடைசி பகுதியில் (Tail End) 0.50-1.00 ppm குளோரின் அளவு கிடைக்கும். இவ்வாறு தினசரி விநியோகம் செய்யப்படும் 12.03 MLD குடிநீருக்கு சுமார் 310 லிட்டர் திரவ குளோரின் தேவைப்படுகிறது. அதன்படி 1 வருட காலத்திற்கு தேவைப்படும் (ஜனவரி 2024 முதல் டிசம்பர் 2024 வரை) திரவ குளோரின் | **தீர்மான எண். 412**<br>அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | வாங்குவதற்கு ஆகும் மதிப்பீட்டுத் தொகை ரூ.20.00 இலட்சத்திற்கு அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>அ) குடிநீர் நிதியின் கீழ் அனுமதிக்கலாம்.<br>ஆ) பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதிபெற்று மேல் நடவடிக்கை எடுத்ததையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>**(ந.க.எண்.153/2019/இ1)** | |
| 15 | நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்27968/2022/தி1 நாள்.24.8.2023 ந்தேதிய கடிதத்தில் மையத்திற்கு தேவையான Inteactive Smart Board மற்றும் கணினி கொள்முதல் செய்ய ஏற்கனவே தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத்தொகைக்கு மேல் அதிகமாகும் தொகையினை நகராட்சி பொதுநிதி அல்லது 15 வது நிதி குழு வரையறுக்கப்படாத மானியம் ஆகியவற்றிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் உரிய விதிமுறைகளை பின்பற்றி மேற்படி கொள்முதல் செய்து கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.<br>அதன்படி இந்நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள அறிவுசார் மையத்தில் கணினிகள் பொருத்துவதற்கு மதிப்பீட்டில் 12 எண்ணம் வீதம் ரூ.5,40,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் Interactive Smart Board டி.வி 75 இஞ்ச்க்கு மதிப்பீட்டில் வழிவகை செய்யப்படவில்லை. எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியபடி, கணினி மற்றும் Interactive Smart Board டி.வி 75 Inch-க்கு வழங்கப்பட்ட Specification- ன்படி கூடுதலாக தொகை கீழ்கண்டவாறு உள்ளது. | **தீர்மான எண். 413**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

| | Specification | மதிப்பீட்டுத்தொகை ரூ |
|---|---|---|
| மதிப்பீட்டின்படி | 12 Nos core i3 processor 10th Genreation 4GB Ram ITB SATA HDD with DVD writer keyboard os window 10 SL (12x45000) | 5,40,000/- |
| நகராட்சி நிர்வாக இயக்குநர் கடிதத்தில் | 11 Nos Gen Inter Core i7 processor 12 MB 16GB Ram | |

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>அறிவுறுத்தியுள்ளபடி</td><td>21.5" TNTFT Cloure monitor window–11 Home<br>(11 x98000)</td><td>10,78,000</td></tr>
<tr><td>கூடுதல் தொகை</td><td></td><td>5,38,000</td></tr>
<tr><td>Interactive Smart Board டி.வி 75 இஞ்ச்க்கு Specification ன்படி விலைப்புள்ளி</td><td></td><td>3,00,000</td></tr>
<tr><td colspan="2">மொத்தம்</td><td>8,38,000/–</td></tr>
</table>
மேற்கண்டவாறு கூடுதலாக தேவைப்படும் தொகைரூ8,38,000/–க்கு நகராட்சி பொதுநிதியில் மற்றும் 15 வது நிதியில் வரையறுக்கபபடாத (Untied) மான்யத்தில் செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலக குறிப்பு<br>
1. மன்றம் அனுதிக்கலாம்<br>
2. நகர்மன்றதலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொடர்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்
</td>
<td></td>
</tr>
<tr>
<td>16</td>
<td>அரசாணை நிலை எண்.166, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.23.11.2016 இல் நகராட்சி பகுதிகளில் உள்ள அனைத்து அரசு பள்ளிகள் மற்றும் நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை தனியார் நிறுவனம் மூலம் பராமரித்திடவும் மற்றும் அதற்கான செலவினத்தை நகராட்சி கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும், உத்தரவிடப்பட்டுள்ளது. மேற்கண்ட பராமரிப்பு பணியை மேற்கொள்ள அரசாணையில் தெரிவித்துள்ள நெறிமுறைகளின்படி, கருத்துருக்கள் தயார் செய்து ஒப்புதலுக்குஅனுப்பி வைத்திட நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.32050/பி2/2016 நாள்.17.12.2016 இல் தெரிவிக்கப்பட்டுள்ளது.<br>
அதன்படி, காரைக்குடி நகராட்சி எல்லைக்குட்பட்ட 2 அரசு பள்ளிகள் மற்றும் 16 நகராட்சி பள்ளிகளில் உள்ள கழிப்பறைகளை அரசாணையில் தெரிவித்துள்ள அளவுகோலின்படி, பணியாளர்களைக் கொண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.172–ன்படி, ரூ.20.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.172, நாள்.28.10.2021–ன் படி, அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பிப்ரவரி 2022 முதல் ஜுன் 2022 பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும், ஜுலை 2022 முதல் டிசம்பர் 2022 வரை இந்நகர்மன்ற தீர்மானம் எண்.279, நாள்.11.10.2022 இல் ரூ.21.00 இலட்சம் கூடுதல்</td>
<td>தீர்மான எண். 414<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | செலவினத்திற்கும் அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. இந்நகர்மன்ற தீர்மானம் எண்.469, நாள்.30.11.2022 இல் ஜனவரி 2023 முதல் ஜுன் 2023 வரை ரூ.21.00 இலட்சத்திற்கும் ஜுலை 2023 டிசம்பர் 2023 வரை ரூ.21.00 இலட்சத்திற்கு அனுமதி பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br>மேலும் தற்போது இப்பணியை செய்து வரும் ஒப்பந்தக்காரர் திரு.டி.செந்தில்குமார், அவர்கள் மூலம் ஜனவரி 2024 முதல் ஜுலை 2024 வரை தொடர்ந்து தற்போது உள்ள மாதாந்திர ஒப்பந்த தொகையின் அடிப்படையில் மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத் தொகை ரூ.21.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத்தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2062/2019/இ1) | |
| 17 | இந்நகராட்சி வார்டு எண். 8, பள்ளிவாசல் தெருவில் பாதாளச்சாக்கடை திட்டத்தில் சாலைகளில் பழுது ஏற்பட்டுள்ளது. மிகவும் மேடு பள்ளங்களான போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் பேவர் பிளாக் சாலை அமைக்க மதிப்பீடு தொகை ரூ.7,10,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு : —** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.58/2023/இ1 | **தீர்மான எண். 415**<br>அனுமதிக்கப்பட்டது |
| 18 | இந்நகராட்சி வார்டு எண் 15ல் காலேஜ் ரோடு சாலையில் டாக்டர்.ராகவகுமார் கிளினிக் எதிரில் சிறிய பாலம் அமைக்கவும் ராஜராஜன் CBSE பள்ளி அருகில் காலேஜ் ரோட்டில் மழைநீர் வடிகால் அமைக்கவும் மதிப்பீடு தொகை ரூ.11.80 /—இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :—** அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.58/2023/இ1 | **தீர்மான எண். 416**<br>அனுமதிக்கப்பட்டது |
| 19 | இந்நகராட்சியில் அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரேற்று நிலையம் உள்ளிட்ட அனைத்து கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல், இயக்குதல் மற்றும் முறையான குடிநீர் விநியோகம் செய்தல் போன்ற குடிநீர் விநியோகம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளை செய்திட தேவையான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று கடந்த 2015ம் ஆண்டிலிருந்து தனியார் நிறுவனம் மூலம் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதனை தொடர்ந்து, இப்பணியினை கடந்த ஓராண்டிற்கு மேற்கொள்ள நகர்மன்ற | **தீர்மான எண். 417**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | தீர்மானம் எண்.419, நாள்.08.03.2019ல் ஒப்புதல் பெறப்பட்டது. இப்பராமரிப்பு பணிக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை அவர்களால் 13.06.2019ல் அனுமதி வழங்கி உத்தரவிடப்பட்டது. (ந.க.எண்.23651/2013/DO1. நாள்.13.06.2019) அதன்படி, ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டு, ஓராண்டிற்கு பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. ந.க.எண்.29156/2019/DO2. நாள்.07.10.2020–ன்படி மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்கப்பட்டது. 31.07.2021 வரை பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. 01.08.2021 முதல் மேலும் ஓராண்டிற்கு நீட்டிப்பு செய்ய(மூன்றாம் ஆண்டு) நகராட்சி நிர்வாக மண்டல செயற்பொறியாளர் அவர்களுக்கு கருத்துரு அனுப்பப்பெற்று ந.க.எண்.2472/2021/பி3, நாள்.22.07.2021–ன்படி தலைமைப் பொறியாளர் அவர்களுக்கு புதுப்பித்தல் செய்ய கருத்துருக்கள் அனுப்பி உள்ளார்.<br>இந்நிலையில் முதன்மைத் தலைமைப் பொறியாளர் அனுமதி கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டதால் அனுமதி கிடைக்கும்வரை தற்காலிகமாக 01.11.2021 முதல் 31.01.2022 முடிய மூன்று மாதங்களுக்கும் மேலும் 01.05.2022 முதல் 30.07.2022 வரை மூன்று மாதங்களுக்கும் இப்பணியை செய்து வரும் ஒப்பந்ததாரர் திரு.டி.செந்தில்குமார் அவர்கள் மூலம் பணி மேற்கொள்ளப்பட்டது. இந்நிலையில் முதன்மை தலைமை பொறியாளர் அனுமதி கிடைப்பதில் மேலும் காலதாமதம் ஏற்படுவதால் அனுமதி கிடைக்கும் வரை தற்காலிகமாக 01.02.2023 முதல் 31.07.2023 வரை உள்ள ஆறு மாதங்களுக்கு கூடுதல் செலவினம் ரூ.48.00 இலட்சத்திற்கு நகர் மன்ற தீர்மானம் எண்.558 நாள்.12.01.2023ல் நகர் மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் ஆகஸ்ட் 2023 முதல் ஜனவரி 2024 வரை உள்ள ஆறு மாதங்களுக்கு இப்பணியை மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.260, நாள்.02.08.2023 நகர்மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் பிப்ரவரி 2024 முதல் ஜூலை 2024 வரை உள்ள ஆறு மாதங்களுக்கு இப்பணியை செய்து வரும் ஒப்பந்ததாரர் திரு.டி.செந்தில்குமார் அவர்கள் மூலம் தொடர்ந்து 2021–ஆம் ஆண்டு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ள விலை விகிதத்தில் மாதாந்திர ஒப்பந்த தொகையின் அடிப்படையில் மேற்கொள்ளவும் மற்றும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.48.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக் குறிப்பு:**<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1137/2019/இ1) | |
| 20 | காரைக்குடி நகராட்சி வார்டு 7ல் நாவலர் தெருவில் பழுதடைந்த சிறுபாலங்கள் மற்றும் மழைநீர் வடிகால்களை சீரமைக்கும் பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.65 | **தீர்மான எண். 418**<br>அனுமதிக்கப்பட்டது |

| | | |
|---|---|---|
| | இலட்சத்திற்கு (எட்டு இலட்சத்து அறுபத்து ஐந்தாயிரம்) மட்டும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :-** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2793/2023/இ1 | |
| 21 | காரைக்குடி நகராட்சி வார்டு எண்.06, அருணாசலம் வீதி வடக்கு 1 ஆம் சந்தில் கழிவு நீர் கால்வாய் சீரமைக்கவும், அண்ணாமலை வீதி முதல் சந்தில் கழிவு நீர் கால்வாய் சீரமைத்து சிறுபாலம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. 2023-24ம் நிதியாண்டில் திருத்திய நிதி நிலையில் பொதுநிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.4558/2023/இ1) | **தீர்மான எண். 419**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 22 | இந்நகராட்சி நகர்மன்றத்தலைவர் அவர்களின் வாகனம் TN63 BS 4444 ஸ்கார்பியோ 40 ஆயிரம் கிலோ மீட்டருக்கு மேல் ஓடியதன் காரணமாக நான்கு டயர்களும் தேய்ந்து விட்டது. அதனை புதிதாக மாற்றுவதற்கும் அதற்கு ஆகும் உத்தேச செலவனம் ரூ.72,000/-க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்<br>2. அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை எடுத்ததை மன்றம் அங்கீகரிக்கலாம். | **தீர்மான எண். 420**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 23 | நகராட்சி பகுதிகளில் டெங்கு கட்டுப்பாடு மற்றும் கொசு ஒழிப்பு பணிகளுக்காக 300 வீடுகளுக்கு ஒரு DBC பணியாளர் வீதம் தனியார் சேவை நிறுவனங்களிடம் வெளிக்கொணர்வு முறையில் பெற்று வருடம் முழுவதும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களின் செயல்முறை ந.க.எ.ண் 2571/2017/J1 நாள்: 28.11.2017 மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 110 DBC பணியாளர்களை தனியார் நிறுவனத்திடம் பெற்று வீடு வீடாக கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போதைய மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் தினக்கூலி விலை விகிதத்தின்படி புதிய டெண்டர் கோரி மேல் நடவடிக்கை தொடர மூன்று மாதத்திற்கான தோராய மதிப்பீட்டு செலவினம் ரூ.55.56 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. | **தீர்மான எண். 421**<br>அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td></td><td>அலுவலகக்குறிப்பு :<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>ந.க.எண்.4003/2023/எச்1</td><td></td></tr>
<tr><td>24</td><td>இந்நகராட்சியில் SFC – School Improvement Grant – Infrastructure Works for the Year 2023–2024 நிதியின் கீழ் ரூ.68.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சிக்கு சொந்தமான இராமநாதன் செட்டியார் துவக்கப்பள்ளியில் புதியதாக 2+2 வகுப்பறைகள் கொண்டு கட்டிடம் கட்டுதல் பணிக்கு 24.11.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளையும் தொழில்நுட்ப கூர்ந்தாய்வு குழுக்கள் மூலம் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் ஏற்கப்பட்டது. மேலும் மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியின் விலைப்பட்டியலை 30.11.2023–ம் தேதியன்று திறக்கப்பட்டதில் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வருமாறு.<br><table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
<tr><td>1</td><td>திரு.D.செந்தில்குமார், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட (–) 0.05% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>திரு.கே.சுந்தரபாண்டியன், காரைக்குடி</td><td>மதிப்பீட்டை விட (+) 2.33% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.D.செந்தில்குமார், காரைக்குடி என்ற ஒப்பந்தகாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.05% குறைவாக உள்ள ஒப்பந்தப்புள்ளியினை மன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.<br><br>அலுவலகக்குறிப்பு :<br>பார்வையிட்டு பதிவு செய்யலாம். ந.க.எண்.2979/2023/இ1</td><td>தீர்மான எண். 422<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>25</td><td>இந்நகராட்சி வருவாய் நிதி 2023–24–ன் கீழ் ரூ.16.50 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சி பழைய பேருந்து நிலையத்தினை இடித்து அப்புறப்படுத்துதல் பணிக்கு 30.11.2023 அன்று மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. இதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியலின் விபரம் பின்வருமாறு.<br><table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>ஒப்பந்த சதவீதம்</th></tr>
</table></td><td>தீர்மான எண். 423<br>அலுவலகக்குறிப்பு அ மற்றும் ஆ அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td>1</td><td>Thiru.D.Senthilkumar, Karaikudi</td><td>மதிப்பீட்டை விட (–) 0.03% குறைவு</td></tr>
<tr><td>2</td><td>Thiru.K.Sundarapandian, Karaikudi</td><td>மதிப்பீட்டை விட (+) 2. 52% அதிகம்</td></tr>
</table>
மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் Thiru.D.Senthilkumar, Karaikudi என்ற ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளி மதிப்பீட்டை விட (–) 0.03% குறைவாக உள்ளது. எனவே, ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>
அலுவலகக்குறிப்பு :<br>
அ) அனுமதிக்கலாம்<br>
ஆ) திட்ட பணியின் முக்கித்துவம் மற்றும் அவசர அவசியம் கருதி நகர்மன்றம் அனுமதியை எதிர்நோக்கி மேல்நடவடிக்கை தொடர்ந்ததையும் மன்றம் ஏற்கலாம்.<br>
ந.க.எண்.5761/2022/இ1
</td>
<td></td>
</tr>
<tr>
<td>26</td>
<td>காரைக்குடி நகராட்சி வார்டு எண்.3,4,5,6,7,8 பகுதிகளில் தற்போது பெய்த வடகிழக்கு பருவ மழையால் குண்டு குழியுமாக இருப்பதால் பொதுமக்கள் வாகன ஓட்டுநர்களுக்கு விபத்து ஏற்படுவதை தடுக்கும் பொருட்டு சேதமடைந்த தார் சாலைகளில் பேட்ச் ஒர்க் (Patch Work) மற்றும் புதிய வேகத்தடைகள் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24.40 இலட்சத்தில் மன்றத்தின் முன் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. 2023–24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொது நிதியின் செலவினம் மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.
</td>
<td>தீர்மான எண். 424<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>27</td>
<td>காரைக்குடி நகராட்சி வார்டு எண்.32–ல் செக்கடி கேட், AVPL குறுக்குத் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் சீரமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு :<br>
1. அனுமதிக்கலாம்.<br>
2. 2023–24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொது நிதியின் செலவினத்திற்கும் அனுமதிக்கலாம்
</td>
<td>தீர்மான எண். 425<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 28 | காரைக்குடி நகராட்சி வார்டு எண்.9 குருவிக்காரன் தெருவில் பழுதடைந்துள்ள பாலத்தினையும் தடுப்பு சுவர் அமைக்கவும் தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4,50,000/−க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023−24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொது நிதியின் செலவினம் மேற்கொள்ள அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 426**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 29 | காரைக்குடி நகராட்சி வார்டு எண்.08, கலைஞர் சாலை, வடக்கு பகுதியில் பழுதடைந்த மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலத்தினை சீர் செய்யும் பணிக்கு ரூ.8,90,000/−க்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டிற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023−24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டுத் தொகையை பொது நிதியின் கீழ் செலவினம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 427**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 30 | காரைக்குடி நகராட்சி பொறியாளர் குடியிருப்பு பகுதியில் மராமத்து பணிகள் செய்ய ரூ.4,80,000/−க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023−24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 428**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 31 | காரைக்குடி நகராட்சி வார்டு எண்.09, கழனிவாசல் பாரதி நகர் 1,2,3 ஆகிய தெருக்களில் பேவர்பிளாக் சாலை அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.13.50/− இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023−24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 429**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 32 | காரைக்குடி நகராட்சி வார்டு எண்.02, கழனிவாசல் கோட்டையூர் சாலையில் சீனிவாச மண்டபம் எதிரில் உள்ள குறுக்கு சந்தில் பேவர் பிளாக் சாலை அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6.00/−க்கு | **தீர்மான எண். 430**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 |

| | | |
|---|---|---|
| | இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023–24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | அனுமதிக்கப்பட்டது |
| 33 | காரைக்குடி நகராட்சி அலுவலகத்தில் பயன்படுத்தி வரும் மும்முனை மின் இணைப்பினை LTCT மின் இணைப்பாக மாற்றி (Panel Arrangement) செய்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.8.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023–24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 431**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 34 | காரைக்குடி நகராட்சி வார்டு எண்.15,20,22,27,28,29,33,36 ஆகிய வார்டுகளில் உள்ள தெருக்களில் உள்ள சாலைகள் தற்போது பெய்த பருவ மழை காரணமாக குண்டும், குழியுமாக இருப்பதால், வாகன ஓட்டிகள், பொதுமக்கள் மற்றும் நகர்மன்ற உறுப்பினர்களிடமிருந்து சீர் செய்து தர கோரிக்கை வரப்பெறுகிறது. எனவே, மேற்படி வார்டுகளில் சேதமடைந்த தார் சாலைகளில் பேட்ச் ஓர்க் மற்றும் புதிய வேகத்தடைகள் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.22.95/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023–24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 432**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |
| 35 | காரைக்குடி நகராட்சி வார்டு எண்.22–ல் கண்ணுப்பிள்ளை தெருவில் பழுதடைந்துள்ள பாலத்திணை புதியதாக சீரமைத்து தரும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.3,60,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :**<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023–24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 433**<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr><td>36</td><td>காரைக்குடி நகராட்சி வார்டு எண்.32, காமாட்சி தெரு மேற்கு பகுதியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு பேவர் பிளாக் தளம் அமைக்க ரூ.4,20,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023-24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண். 434<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>37</td><td>காரைக்குடி நகராட்சி வார்டு எண்.31, செஞ்சை திவான் பகதூர் சாலை பகுதியில் குடிநீர் பகிர்மான குழாய் பதிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.6,30,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு :<br>1. அனுமதிக்கலாம்.<br>2. 2023-24 ஆம் ஆண்டு நிதிநிலையில் திருத்திய மதிப்பீட்டில் பொதுநிதியில் செலவினம் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்</td><td>தீர்மான எண். 435<br>அலுவலகக்குறிப்பு 1 மற்றும் 2 அனுமதிக்கப்பட்டது</td></tr>
<tr><td>38</td><td>காரைக்குடி நகராட்சி சிவகங்கை மாவட்டத்தில் உள்ள ஒரு சிறப்பு நிலை நகராட்சியாகும். இந்நகராட்சியின் பரப்பளவு 13.75 ச.கி.மீ அகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 2011 கணக்கெடுப்பின்படி 106714 ஆகும். இந்நகராட்சியில் குடிநீர் விநியோகம் நகரில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்குழாய் கிணறுகளின் நீர் ஆதாரத்தைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>இந்நகரின் முக்கிய குடிநீர் ஆதாரம் சம்பையூற்று என்ற இயற்கை நீரூற்று ஆகும். இங்கு 13 ஆழ்குழாய் கிணறுகளும் தலைமை நீரேற்று நிலையமும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், ஓ.சிறுவயல் பகுதியில் இரண்டு ஆழ்குழாய் கிணறுகளுடன் கூடிய நீரேற்று நிலையம் மற்றும் நகரில் 16 இடங்களில் ஆழ்குழாய் கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. மேற்கண்ட தலைமை நீரளிப்பு நிலையம் மற்றும் நீரேற்று நிலையங்களிலிருந்து பெறப்படும் குடிநீர் நகரில் கீழ்கண்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் ஏற்றப்பட்டு தினசரி பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.<br><br><table><tr><td>1</td><td>திருச்சி சாலை</td><td>2.50 இலட்சம் லிட்டர் OHT</td></tr><tr><td>2</td><td>சாத்தப்பா பூங்கா</td><td>15.00 இலட்சம் லிட்டர் OHT</td></tr></table></td><td>தீர்மான எண். 436<br>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 3 | சாத்தப்பா பூங்கா | 3.00 இலட்சம் லிட்டர் OHT |
| 4 | மகர்நோன்பு திடல் | 15.00 இலட்சம் லிட்டர் OHT |
| 5 | மகர்நோன்பு திடல் | 3.00 இலட்சம் லிட்டர் OHT |
| 6 | சுப்பிரமணியபுரம் | 4.00 இலட்சம் லிட்டர் OHT |
| 7 | சூடாமணிபுரம் | 8.00 இலட்சம் லிட்டர் OHT |
| 8 | செஞ்சை | 6.00 இலட்சம் லிட்டர் OHT |
| 9 | கல்லுக்கட்டி | 1.65 இலட்சம் லிட்டர் OHT |
| 10 | கழனிவாசல் | 3.00 இலட்சம் லிட்டர் OHT |

மேற்கண்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளுக்கு குடிநீர் ஏற்றம் செய்திட 22.101 கி.மீ. நீளத்திற்கு பம்பிங் மெயின் குழாய்களும், பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்திட 186.733 கி.மீ. நீளத்திற்கு பகிர்மானக் குழாய்களும் மற்றும் குடிநீர் விநியோகத்திற்கு ஏற்றவாறு அடைத்து, திறப்பதற்கு 38 வால்வுகள் அமைக்கப்பட்டு பராமரிப்பு செய்யப்பட்டு வருகிறது.

மேற்கண்டவாறு அமைக்கப்பட்டுள்ள தலைமை நீரளிப்பு நிலையம் உள்ளிட்ட அனைத்து கட்டமைப்பு வசதிகளை பராமரித்தல், இயக்குதல் மற்றும் முறையான குடிநீர் விநியோகம் செய்தல் போன்ற குடிநீர் விநியோகம் சம்பந்தப்பட்ட அனைத்துப் பணிகளை செய்திட தேவையான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று (ந.க.எண். 23651/2012/DO1, நாள்.13.06.2019) தனியார் நிறுவனம் மூலம் 01.08.2019 முதல் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 01.08.2019 முதல் 31.07.2020 வரை ஓராண்டு அனுமதி காலம் முடிவுற்ற நிலையில் மீண்டும் நகராட்சி நிர்வாக தலைமைப் பொறியாளர் அவர்களின் அனுமதி பெற்று (ந.க.எண். 29156/2019/DO2, நாள்.09.10.2020) 01.08.2020 முதல் 31.07.2021 வரை பராமரிப்பு பணி மேற்கொள்ள பணி நீட்டிப்பு செய்து உத்தரவு வழங்கப்பட்டது. இந்நிலையில் இரண்டாம் ஆண்டிற்கு அனுமதிக்கப்பட்ட காலம் 31.07.2021ல் முடிவடைந்ததால் மீண்டும் தலைமைப் பொறியாளர், சென்னை அவர்களிடம் உரிய அனுமதிகள் பெற திட்ட பிரேரணைகள் அனுப்பப்பட்டது.

| | | |
|---|---|---|
| | அக்காலங்களில் கொரோனோ நோய் தொற்று ஏற்பட்டு ஊரடங்கு காலமாக இருந்ததால் உரிய அனுமதிகள் ஏதும் பெற இயலவில்லை, ஆகையால் தற்சமயம் வரை நகர்மன்ற அனுமதியுடன் 31.07.2021–ம் தேதிய விலை விகிதத்தில் குடிநீர் விநியோகம் பணி தனியார் மூலம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.<br><br>எனவே, மேற்கண்ட குடிநீர் விநியோக பராமரிப்பு பணியினை தொடர்ந்து தனியார் மூலம் ஓராண்டிற்கு மேற்கொள்வதற்கு நடப்பாண்டு பொதுப்பணித்துறை விலை விகிதத்தின்படி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.178.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களிடம் முறையான நிர்வாக அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர மன்றம் அனுமதிக்கலாம்.<br>**அலுவலகக் குறிப்பு :**<br>குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.2071/2020/இ1 | |
| 39 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.04, செக்காலை சிவன் கோவில் வீதி, சாமிநாதன் ஆசாரி தெரு சந்திப்பில் சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் சேதமடைந்துள்ளது. இதனை சரிசெய்து சிறுபாலம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்தல் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் இதற்கான மதிப்பீட்டு தொகை ரூ.3.00/– இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலகக்குறிப்பு :** அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.003301/2024/இ1 | **தீர்மான எண். 437**<br>அனுமதிக்கப்பட்டது |

ஒம்.திரு.சே.முத்துத்துரை,
நகர்மன்றத்தலைவர்

//உண்மை நகல்//

ஆணையாளர்,
காரைக்குடி நகராட்சி